Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 1, Special Issue - 1, January 2022 E-ISSN: 2583-0481

# The Structure and Themes in Marutha Thinai Poems

**Dr R. Prabha,** Assistant Professor of Tamil,
Quince College of Arts and Science for Women, Pudukottai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3290-5221**
**DOI: 10.5281/zenodo.6622283**

## Abstract

*The article delineates the life of love and the rise of love, which is rooted in the Sangam literature that separates the inner and the outer life. In the external life work of men, war qualities, and virtues are pointed out as vital for life. In the naduvan Ainthinai, the fourth one is the Maruthathinai. Agri fields and the people of that area and the lifestyle of the people are delineated here. In this Marutha Thinai, many poets have written verses based on it. Among them Maruthan Ilanakanar and Orambokiyar are both good at singing Maruthan. Therefore, Tolkappiyar's theme, which helps to reveal the structure of the inner life located in the songs, is set to explain the messages about Marutham Land.*

**Keywords:** Structure, Themes, Marutha Thinai, Poems.

## References

[1] Kurunathan, Rama., *Kurinjikkattum Samuthayam* , Tamil Road No.138, Sainagar 3rd Street, Virumbakkam, Chennai, 2007.
[2] Shankar, Ir., *Maruthanilathu People*, International Tamil Journal, 2020.
[3] S.W., *Sangam Literature* (E Volume-1), Manivasakhar Publishing House, Chennai, 2010.
[4] Ibid, Volume - 2, 2010.
[5] Manikkam, VSP, *Tamil Love*, Meyyappan Publishing, Chidambaram, 2007.
[6] Mu. Va . *Nature in Ancient Tamil Literature*, Pari Munai, Chennai, 2011.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# மருதத்திணைப் பாடல்களில் வெளிப்படும் கருப்பொருள்களின் அமைப்பும் எழிலும்

**முனைவர் ரா.பிரபா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த் துறை, குயின்ஸ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி, புதுக்கோட்டை, தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0002-3290-5221

DOI: 10.5281/zenodo.6622283

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியத்தில் அடிநாதமாக விளங்கும் அகமும், புறமும் இரண்டினையும் பிரித்து அகத்தில் தன் வாழ்வில் எழும் காதலன்பு, அன்பின் எழுச்சி முறையோடு சார்ந்த வாழ்வியல் நெறிகள் ஆகியவற்றைப் இப்பகுதியில் பேசுகின்றனர். புறத்தில் மேற்கொள்ளவேண்டிய முறைகள் ஆடவன் சார்ந்த பணிகள், போரியல் மரபுகள், தன்னகத்தே கொள்ள வேண்டிய அறநெறிகள் ஆகியவை கூறப்படுவதைக் காண்கிறோம். நடுவண் ஐந்திணையில் நான்காவதாக கூறப்படுகூது மருதம் ஆகும். வயலும் வயல் சார்ந்த பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் அறங்களைப் பற்றிக் கூறுவது மருதமாகும். இம்மருத திணையில் பல புலவர்கள் பாடல்களைப் படைத்துள்ளனர். அவர்களுள் மருதன் இளநாகனார், ஓரம்போகியார் ஆகிய இருவரும் மருதம் பாடுவதில் வல்லவர்கள். ஆகவே அப்பாடல்களில் அமைந்துள்ள அகவாழ்வின் அமைப்பினை வெளிப்படுத்த உதவும், தொல்காப்பியரின் கருப்பொருள் மருதத்திணை பற்றிய செய்திகள் பேசப்படுகின்றது.*

**திறவுச்சொற்கள்:** அமைப்பு, கருப்பொருள், மருதத் திணை, பாடல்கள்

## முன்னுரை

சங்க இலக்கியத்தில் அடிநாதமாக விளங்கும் அகமும், புறமும் இரண்டினையும் பிரித்து அகத்தில் தன் வாழ்வில் எழும் காதலன்பு, அன்பின் எழுச்சி முறையோடு சார்ந்த வாழ்வியல் நெறிகள் ஆகியவற்றை இப்பகுதியில் பேசுகின்றனர். புறத்தில் மேற்கொள்ள வேண்டிய முறைகள் ஆடவன் சார்ந்த பணிகள், போரியல் மரபுகள், தன்னகத்தே கொள்ளவேண்டிய அறநெறிகள் ஆகியவை கூறப்படுவதைக் காண்கிறோம். நடுவண் ஐந்திணையில் நான்காவதாக கூறப்படுவது மருதம் ஆகும். வயலும் வயல் சார்ந்த பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் அறங்களைப் பற்றிக் கூறுவது மருதமாகும். இம்மருததிணையில் பல புலவர்கள் பாடல்களைப் படைத்துள்ளனர். அவர்களுள் மருதன் இளநாகனார், ஓரம்போகியார் ஆகிய இருவரும் மருதம் பாடுவதில் வல்லவர்கள். ஆகவே அப்பாடல்களில் அமைந்துள்ள அகவாழ்வின் அமைப்பினை வெளிப்படுத்த உதவும் கருப்பொருளை ஆராய்வதே இங்கு நோக்கமாக அமைகிறது.

## தொல்காப்பியத்தில் கருப்பொருள்

பண்டைய தமிழ் ஆள்வோர்களும், சான்றோர்களும் தனது வாழ்வியல் கோட்பாட்டினை வகுத்த முறையினை முதன்மை இலக்கணமான தொல்காப்பியம் நுவலும். பெரியோரின் செய்யுளை

ஆராய்ந்தால் முதற்பொருள் எனவும் கருப்பொருள் எனவும், உரிப்பொருள் எனவும் கூறப்பட்ட மூன்று பொருள்களுமே காணப்பெறும் என்று தொல்காப்பியச் சூத்திரம் கூறும்.

**முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே**

**நுவலுங் காலை முறைசிறந் தனவே**

**பாடலுட் பயின்றவை நாடுங் காலை (தொல்.பொருள்.3)**

முதற்பொருள் என்பது நிலமும், பொழுதும் ஆகிய இரண்டும் ஐவகை நிலத்தை சார்ந்துள்ளோரின் காமஉணர்வினை கிளர்ந்து எழச்செய்யும். பெரும்பொழுது சிறுபொழுது ஆகிய இரண்டுமாம். கருப்பொருள் என்பது அவ்வவ்திணைக்குரியவனவாய் அவற்றின்சார் உள்ளனவாய் விளங்கும் தெய்வம் முதல் தொழில் வரை பதினான்கு (14) என்று காட்டுகிறது தொல்காப்பியச் சூத்திரம்.

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**

**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**

**அவ்வகை பிறவும் கருவென மொழிப (தொல்.பொருள்.20)**

உரிப்பொருளில் ஐவகை ஒழுக்கங்களாகிய ஊடலும் ஊடல் நிமித்தமும் உடையதாய் விளங்குவது மருதநிலமாகும். ஊடல் என்பது புலவி என்று பொருள். இவ்வொழுக்கத்தினை கைக்கொண்டு தலைவன், தலைவியின் வாழ்வியல் உணர்வுகளை வெளிப்படுத்தும் சூழலில் கருப்பொருட்கள் முதன்மையான இடத்தை வகிக்கின்றன.

**மருதம் என்பதன் பொருள்**

மதுரை என்ற பெயர் ‘மருதை’ என்பதன் மருபுச் சொல் என பலர் கருதுகின்றனர். ஆதலால்தான் மருது சகோதரர்கள் என்று நம் முன்னோர் நிலத்தோரால் பெயரிட்டுக் கொண்டனர் என்றக் கருத்து பொருந்தி பார்க்க வேண்டிய ஒன்றாக இருக்கிறது.

தமிழ் இலக்கியங்களில் ஒவ்வொன்று காரணப் பெயராகவோ அல்லது இடுகுறிப் பெயராகவோ இடம்பெறும். காரணப் பெயர்கள் பொருள் பொதிந்த நிலையிலும், இடுகுறிப்பெயர்கள் வழக்கத்தில் உள்ள பெயர்களில் காணப்படுவது சிறப்பான ஒன்றாகும். அந்தவகையில் திணைக்குரிய பெயர்களும் காரணப்பெயராகவே வழங்கப்பட்டுள்ளன என்பதைச் சான்றாக,

**குறுகுதல் குறிஞ்சி எனவும், மருவுதல்**

**மருதம் எனவும், முல்லுதல் முல்லை**

**எனவும், பற்றுதல் பாலை எனவும்**

**நெய்வது நெய்தல் எனவும் கூறுவர் (இராம.குருநாதன், குறிஞ்சிக் காட்டும் சமுதாயம். ப.10)**

மருவுதல் என்பது ஒன்றாதல், இரண்டறக் கலத்தல், தழுவுதல் என்ற பொருளைக் கொண்டு உற்றுநோக்கினால் தலைவன் தலைவியின் ஊடலைக் களைத்து தழுவிக்கொள்ளும் கற்புநெறியாக கொள்ளப்படும். அகராதிகள் மருதம் என்பது குறிஞ்சிப்பாட்டில் கூறப்பட்டுள்ள நீர்மருது, குலமருது, மருதமரம், வெள்ளை மருது, அர்ச்சுனம் என்று போன்ற மலர்களின் பெயராகவும் கொண்டுள்ளது. இப்பழம்பெருமைகளைக் கொண்டு தனது வாழ்வியல் அன்றாட சிந்தனைகளின் அடிப்படையில் சிறப்பானதொரு பதிவினை உலகத்தில் எம்மொழியும் சொல்லிற்க இயலாது.

**மருதப் புலவர்கள்**

மருதத்திணையில் பல புலவர்கள் பாடல்களைப் பாடியுள்ளனர். ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை ஆகிய நூல்களில் பல பாடல்கள் மருதத் திணையில்

பாடப்பெற்றுள்ளன. இவற்றில் இருநூல்களும் இரு புலவர்களும் சிறந்து விளங்குகின்றன. ஐங்குறுநூற்றில் மருதப்பாடல்களை ஓரம்போகியாரும் கலித்தொகையில் மருதக்கலிப் பாடல்களை மருதன் இளநாகனாரும் பாடியுள்ளார். ஐங்குறுநூறு 100 பாடல்களும், கலித்தொகையில் 35 பாடல்களும், அகநானூற்றில் 40 பாடல்களும் மருதத் திணைப்பாடல்களாகும்.

அகன் ஐந்திணைகளுள் நடுநிலையானது மருதத்திணை 'இதை உழுதும் உழுவித்தும், உண்டும் உண்பித்தும் வாழும் உழவர்களின் ஒழுக்கத்தை உலகம் உவப்பப் பாடிய புலவரே ஓரம்போகியாரே, இவர் ஓரேர் போகியார் ஒன்னார் உழவர்' என்று அழைக்கப்பெற்றவர். இல்லறம் அறத்தோடு நிற்பதால் விருப்பத்தை வேட்கை எனவும், வேழக்கரும்பான கொறுக்கத்த வேழம் எனவும், எப்போதும் வளைக்குள் மறைந்து வாழும் நண்டைக் கள்வன் எனவும், சிறுசினத்தை புலவி எனவும், தலைமகளைக் கிழத்தி எனவும், தலைவனை மகிழ்நன் எனவும் குறித்து காட்டும் உழவர் புலவர் ஓரம்போகியார் என்பதை அவர்தம் மருதத்திணைப் பாடல்கள் தெளிவாகக் காட்டும். ஓரம்போகியார் காட்டும் தலைவன் பரத்தையர் ஒழுக்கத்திற்கு பெரிதும் உள்ளம் போகியாக விளங்குகின்றார். (வ.சு.ப.மாணிக்கம், தமிழ்க் காதல், ப.298).

மருதநிலம் நீர்வளமிக்க தீம்புனல் சூழ்ந்த ஊர். ஆதலால் அங்கே நீர்த்துறையில் உள்ள தெய்வம். அங்கே விளையாடி ஒளிந்து கொள்ளும் நண்டு ஆகியனவற்றை கொண்டே தோழி, தன் தலைவியின் களவொழுக்கத்தை வெளிப்படுத்தி களவு வாழ்வைக் கற்பு வாழ்க்கையாக மாற்ற வழி காண்கிறாள் என்பதனை கள்வனை கற்பாக மாற்றியமைத்து ஐங்குறுநூற்றின்வழி பாடியது சிறப்பிற்குரியது.

**உண்டுறை அணங்கிவள் உறைநோய் ஆயின்**
**தண்சேறு கள்வன் வரிக்கும் ஊரற்கு**
**ஒண்தொடி நெகிழச் சாஅய்**
**மென்தோள் பசப்பது எவன்கொல் அன்னாய் (ஐங்.மருதம் 117-28)**

கலித்தொகையிலுள்ள மருதத்திணைப் பாடல்களை இவர் பாடி 'மருதன்' என்னும் அடைமொழியைப் பெற்றுள்ளார்.

**மருதத்திணையின் கருப்பொருள்கள்**

வயலும் வயல் சார்ந்த நிலமாகிய மருதத் திணையில் அந்நிலம் சார்ந்த சூழல்களுக்கு ஏற்பவே உயிரின வாழ்வியல் அமைந்துள்ளன. வயலும் சார்ந்த உணவும், நீரும், மரமும் பிறவும் சேர்ந்து இலக்கணம் வகுத்தோர் நிலம் சார்ந்த உயிருள்ள உயிரற்ற பொருட்களைக் கருப்பொருளாகக் குறிப்பிட்டனர். அவ்வகையில் மருதத்திணை கருப்பொருளும் அமைகின்றன. அவை தெய்வம் தொடங்கி தொழில் வரைக்கும் அமைகின்றன.

| | | |
|---|---|---|
| 1. தெய்வம் | - | இந்திரன் |
| 2. மக்கள் | - | உயர்ந்தோர் / தாழ்ந்தோர் |
| 3. பறவை | - | அன்னம், அன்றில், வண்டாளம், நாரை, கம்புள் |
| 4. விலங்கு | - | எருமை, நீர்நாய் |
| 5. ஊர் | - | பேரூர், மூதூர் |
| 6. நீர் | - | ஆற்று நீர், பொய்கை நீர், கிணற்றுநீர் |
| 7. பூ | - | தாமரைப்பூ, கழுநீர் பூ |
| 8. மரம் | - | காஞ்சி, வஞ்சி, மருதம் |

9. உணவு - நெல்
10. பறை - நெல்லறி பறை, மணமுழவு
11. யாழ் - மருதயாழ்
12. பண் - மருதப்பண்
13. தொழில் - உழவு, விழாச்செய்தல், நீராடல், நெல் அரிதல், குளம் குடைதல்

**தெய்வம்**

தமிழ்ச் சமூகத்தில் முதன்மையான பல செயல்பாடுகளில் தெய்வச் சிந்தனைகள் மேலோங்கியவண்ணம் இருந்து வருகிறது.

தொல்காப்பியம் மருதநில கடவுளாக வேந்தனைக் கூறுகிறது. 'வேந்தன் மேய தீம்புனல் உலகமும்' என்கிறது. ஆனால் பிற்கால நூல்கள் இந்திரனை மருதநிலக் கடவுளாக கூறுகிறது. வேந்தனே ஆரிய கலப்பினால் இந்திரனாக மாறியிருப்பதாகத் தமிழ் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். திராவிட ஆரிய கலப்பினால் இவ்வகையான நிகழ்வுகள் நடைபெற்றன என்றும் தொல்காப்பியர் காலத்திற்கு மிகவும் பிற்காலத்தவரான உரையாசிரியர்கள் வேந்தன் என்பதற்கு இந்திரன் என்று கூறினார்கள். ஆனால் ஐங்குறுநூற்று பாடல்கள் மருதத்தின் தெய்வமாக இந்திரனைக் குறிப்பிடுகிறது.

**இந்திரவிழாவில் பூவின் அன்ன**
**புன்தலைப் பேடை வரிநிழல் அகவும்**
**இவ்வூர் மங்கையர்த் தொடுத்துஇனி**
**எவ்வூர் நின்றன்று மகிழ்நின் தேரே? (ஐங்.62)**

என்ற சங்கப்பாடலின்வழி மருத நிலத் தலைவனைப் பார்த்து தலைவி பூவைப்போன்ற மென்மையான உச்சிக் கொண்டையை உடைய தலையையுடைய பெண்மயில் ஆண் மயிலை அழைக்க அத்தகைய வளமான ஊர். அவ்வளவு வளம் பொருந்திய ஊரில் வாழ்கீன்ற மங்கையரைத் தொடுத்து இந்திரவிழா நடத்துவதற்கு உன்னுடைய தேரானது ஊரெங்கும் சென்றது. இனி உன்னுடைய தேர் எங்கு சென்று மங்கையரைத் தொடுக்குமோ என்று தலைவனிடம் தலைவி கேட்கிறாள். ஆகவே அக்காலத்திலும் தேர், திருவிழா நடைபெற்றது என்றும் இன்றைய கால தமிழர் திருநாள் என்று சொல்லக்கூடிய பொங்கல்தான் அக்காலத்தில் இந்திரவிழாவாகக் கொண்டாடப்பட்டிருக்க வேண்டும் என்பது பொருத்திப்பார்க்க வேண்டிய ஒன்றாகும்.

**மக்கள்**

அரசன், மக்கள் என்பதனைப் போன்று சங்க வாழ்வான சமூக வாழ்விலும் தலைவன், ஊரன், உழவர் போன்ற பெயர்களில் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

**மகிழ்நன்**

மருதநிலத்தின் தலைவனாக இருக்கும் அரசனை 'மகிழ்நன்' என்ற பெயரால் உயர்ந்தோரை குறிப்பிடுவதாக ஐங்குறுநூற்று பாடல்வரிகள் சான்று பகர்கின்றது.

**பகலில் தோன்றும் பல்கதிர்த் தீயின்**
**ஆம்பல்அம் செறுவின் தேனூர் அன்ன**
**இவள்நலம் புலம்பப் பிரிய**
**அனைநலம் உடையளோ மகிழ்நன் பெண்டே- (ஐங்.57)**

தலைவனிடம் புறத்தொழுக்கம் உள்ளது என்பதனை அறிந்த தோழி அவனிடம் பரத்தமைப் பற்றி வினாவியது. தலைவனை அனைவரும் 'மகிழ்நன்' என்ற பெயராலேயே அழைக்கின்றனர். ஞாயிற்றைப் போலத் தோன்றும் பல கதிர்களை உடைய ஒலியினையும் ஆம்பல் நிறைந்த வயல்களையும் உடைய வளம்மிக்க தேனூர் போன்ற இவளது பெண்மை நலம் நீ பிரிந்ததால் துன்பமுற்றது. நீ விரும்பிய பரத்தை தலைவியைப் போன்ற பேரழகியோ? என்று கேட்கிறாள்.

**ஊரன்**

நெடுநாள் பரத்தையரிடம் சென்று மனைவியிற் திரும்பிய தலைவனிடம் தோழிக் கூறியது.

**கூதிர் ஆயின் தன்கலிழ் தந்து,**
**வேனில் ஆயின் மணிநிறம் கொள்ளும்**
**யாறுஅணிந் தன்றுநின் ஊரே**
**பசப்புஅணிந் தளவால் மகிழ்ந என் கண்ணே (ஐங்.45)**

"ஊரே – ஊரன்" என்று தலைவனைக் குறிப்பிடுவதாக இப்பாடல் உணர்த்துகிறது.

**உழவர்**

மருத நிலத்தில் வாழக்வடிய விவசாயம் செய்யக்கூடிய மக்களை 'உழவர்' என்ற பெயரால் அழைத்தனர்.

**வித்திய உழவர் நெல்லொடு பெயரும்**
**பூக்களுள் ஊரன் தன்மனை**
**வாழ்க்கை பொலிது எனவேட் டேமே (ஐங்.3, மு-7)**

(உழவர் – மக்கள்)

தோழி தலைவனின் நாட்டின் சிறப்போடு, அவனை வாழ்த்தியும் இடம்பெற்ற பாடலில் நாட்டு மக்களை உழவர் என்ற பெயரால் குறிப்பிட்டனர். நாங்கள் நெல்லுடன் உழவர்கள் வீட்டிற்கத் திருமபுவர். மருதநிலத்தின் மலர்கள் மிகுதியாகப் பூக்கின்றன. எங்கள் தலைவன் இல்லற வாழ்க்கை சிறப்பாகப் பொருட்டு என நாங்கள் விரும்பினோம் என்றாள் தோழி.

**பறவை**

'மாவும் புள்ளும் ஓரறிவினவே' என்று கூறும் தொல்காப்பியர் 'புள்' என்பதை 'பறவை' என்று குறித்து பொருள் கொள்கிறார். சங்க இலக்கியத்தில் அந்தந்த நிலத்துக்குரிய புள்ளினம் தனக்கென ஓர் இடத்தைப் பிடிக்கின்றது. அந்த வகையில் மருத நிலத்தின் பறவைகளாக 'நாரை, நீர்க்கோழி' ஆகியவை அமைகின்றன. சமூக வாழ்வியலில் தலைவன், தலைவியைக் கொண்டு அகத்திணை இலக்கியமாகப் பதிவிடும் பொழுதுகளும் பொருட்கள் முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

**நாரை**

**கயல்ஆர் நாரை போர்வில் சேக்கும்**
**தண்துறை ஊரன் கேண்மை**
**அம்பல் ஆகற்க எனவேட் டேமே- (ஐங்.9 (3-6)**
**உளைப்பூ மருதத்துக்கு கிளைகுருகு இருக்கும் (ஐங்.7)**

நாரை – நாரை, குருகு – நாரை. மன்னனின் சிறப்பைக் குறிப்பிட்டுவிட்டு கயல்முன் உண்டு வைக்கோல் போரில் தங்கும் நாரையையுடைய மருதநிலத் தலைவனின் நட்பு பிற பழிச்சொல் கூறாத வகையில் அமையட்டும் என்று தோழி உரைக்கிறாள்.

**விலங்கு**

மருதத் திணைக்கு உரிய விலங்கான எருமையை மையமாக்கி எருமைப்பத்து என்ற பகுதி இடம்பெற்றுள்ளது.

**கருங்கோட்டு எருமைச் செங்கண் புனிற்றுஆ**
**காதல் குழவிக்கு ஊறுமுலை மடுக்கும்**
**நந்தை நம்மூர் வருதும்**
**ஒண்தொடி மடந்தை முன்னையாம் பெறினே (ஐங்.92)**

தலைவன் தலைவியின் வரைவின் பொருட்டு அவள் நாட்டு சிறப்பினையும் உணர்வினையும் உவமையாகக்கூறி பெண் கேட்பேன் என்று கூறும்போது கரிய கொம்புகளையும், சிவந்தகண்களையும் உடைய அண்மையில் ஈன்ற தாய் எருமை தன் அன்புக் கன்றுக்குப் பால் சுரந்து கொடுக்கும் தன்மையுடையது நின் தந்தை வாழும் ஊர். வளையல் அணிந்த உன்னை எனக்கு வரையின் பொருட்டு தருவது உறுதியானான் நானே உன் ஊருக்கு வந்து பெண் கேட்பேன் என்று தலைவன் கூறுவதாக அமைந்துள்ளது.

**ஊர்**

விலங்கிலிருந்து மனிதன் தோன்றினான் என்கிறது அறிவியல். தனித்தனியாக வாழ்ந்து காடு, மலை, வயல் வெளிகளில் தனது வாழ்க்கை வாழ்ந்துவந்த மனிதன் பின்னர் குழுவாகச் செயல்பட முனைந்தான். குழுவாக இருந்த மனித கூட்டம் அந்த கூட்டத்திற்கென்று ஓர் பெயரிட்டு அழைத்தது.

பல கூட்டங்கள் தங்க வாழ்கின்ற இடங்களுக்கு ஊர் என்று பெயரிட்டு அழைத்து பின்னர் அவ்வூர் ஒவ்வொரு திணைக்கும் வெவ்வேறு பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன. அச்சாயலில் மருதநிலத்திற்குரிய பெயர் ‘மூதூர்’ என்பதாகும். இதனை சங்க இலக்கிய பாடல் உணர்த்துகிறது.

**மணல்ஆடு மலிர்நிறை விரும்பிய, ஒண்தழைப்**
**புனல்ஆடு மகளிர்க்கப் புணர்துணை உதவும்**
**வேழம் மூதூர் ஊரன்**
**ஊரன் ஆயினும் ஊரன் அல் லன்னே (ஐங்.15)**

என்ற செய்யுளின்வழி தழை ஆடை உடுத்திய மகளிர்க்கு மிக்க வெள்ளத்தில் நீராடுவதற்கு வேழத்தால் செய்யப்பெற்ற தெப்பம் உதவுகின்றது. அத்தகைய வேழங்களையுடைய பழைமையான ஊரைச் சார்ந்த தலைவன் ஊரிலிருந்தாலும் பரத்தையரோடு உறைவதால் ஊரனாகக் கொள்ளமாட்டான். வேழம் மகளிர்க்கு உதவுவது போல தலைவனும் பரத்தையர்க்கு உதவுவான் என்பது உவமையாக கொள்ளப்பட்டுள்ளது.

**நீர்நிலை**

ஐம்பூதங்களில் ஒன்றானது நீர். இது உயிருள்ள அனைத்திற்கும் இன்றியமையாதது. நீர் இல்லாவிடில் பிற செயல்பாடுகளும் நடைபெறாது. அப்படி இன்றினயமையாதவற்றில் மருதநிலத்தில் ‘பொய்கை’ என்று அம்மக்கள் பெயரிட்டு அழைத்தனர்.

**அம்மா வாழி, தோழி, நம்உர்**
**பொய்கை ஆம்பல் நார்உரி மென்கால்**
**நிறத்தினும் நிழற்றுப் மளள்ளே**
**இனிப் பகத்தன்றஎன மாமைக் கவினே (ஐங்.35)**

என்ற பாடல் தலைவிக் கூற்றாக அமைகிறது. தோழியிடம் எனது மேனியழகு நம் ஊர்க் குளத்தில் வளர்ந்த ஆம்பல் தண்டு நார் உரிக்கப்பட்ட தோற்றத்தினைவிட ஒளியுடையதாக இருந்தது. அப்போது தலைவன் பிரிவால் மேனி பசலையுற்றது என்கிறாள். இதில் பொய்கை என்பதுகருப்பொருளாகக் கொண்டுள்ளது.

**பூ**

மருதநிலத்தில் இருக்கக்கூடிய பொய்கைகளில் தாமரையும், ஆம்பலும் தான் வளரக்கூடிய சூழலில் உருவாகும். இம்மலரை வைத்துதான் அந்நிலத்து மக்கள் இறைவழிபாட்டில் வன்முறை வழிபாடும், மென்முறை வழிபாடும் மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே மருதநிலத்திற்குரிய மலராக தாமரையும், ஆம்பலும் இலக்கியத்தில் இடம்பெற்றுள்ளது. **பொய்கை பூத்த, புழைக்கால் ஆம்பல் (ஐங்.34)** என்று தலைவி, தோழியிடம் தலைவனின் கண்கள் நம் ஊர்க்குளத்தில் வளர்ந்த அல்லி மலரின் தாதுபோன்ற வண்ணத்தைக் கொண்டனவோ என்று கேட்கிறாள். அதேபோன்று,

**தாமரை போல மலரும் ஊர**

**பேணா ளோருன் பெண்டே (ஐங்.68)**

ஆம்பல் மொட்டுகள் தாமரை போன்று மலர்கின்ற வளநாட்டு தலைவனேநீ காதலிக்கும்பரத்தை பெண் வேண்டிய குணங்களைப் பேணாதிருக்கிறாள். நான் அவளை அடக்கவும் அவள் அடங்குகின்றாளில்லை என்று தலைவியின் கூற்றாக அமைகிறது.

**மரம்**

பழந்தமிழ் சமூகம் தாவரங்களை தனது வாழ்வின் ஓர் அங்கமாக வைத்திருந்தனர். மருத நிலத்தில் வாழககூடிய மரங்களாக வஞ்சி, காஞ்சி, மருதம் போன்றவற்றை குறிப்பிடுகின்றனர்.

**காஞ்சிநீழல் தமர்வளம் பாடி (அகம்.286-4)**

**முடம் முதிர் மருதத்துப் பெருந்துறை (ஐங்.31)**

**துணையோர் செல்வமும் யாமும் வருத்துதும்**

**வஞ்சி ஓங்கிய பாணர் ஊர (ஐங்.50)**

என்ற பாடல்களின் வழி மருதநிலக் கருப்பொருளான காஞ்சி, மருதம், வஞ்சி ஆகிய மரங்கள் இந்நிலத்தில் இருந்தது என்பதற்கு சான்றாக அமைகின்றது.

**உணவு**

இவ்வுலகில் வாழக்கூடிய அனைத்து உயிர்களுக்கு இன்றியமையாத ஒன்று உணவு. அவ்வுணவினை மருத நிலத்து மக்கள் தம்வயல் சார்ந்த நிலத்தில் நெல்லைப் பயிரிட்டு உணவாக உட்கொண்டனர். அதனை, ஐங்குறுநூற்றுப்பாடல் ஒன்று தோழிக்கூற்றாக அமைந்துள்ளது.

**செந்நெல் அம்செறுவிற் கதிர்கொண்டு களவன்**

**தண்ணக மண்அளைச் செல்லும் ஊரற்கு (ஐங்.27)**

நண்டு செந்நெல் விளையும் வயலில் புகுந்து முற்றிய கதிர்களைக் கொண்டு தன் குளிர்ச்சி பொருந்திய வளைக்குள் செல்கின்ற ஊரனுக்காக நாம் மெலிந்து நம் வளைகள் கழன்று, உடல் மெலிந்து துன்புற்று வருந்துவது ஏன் என்று கேட்கிறாள் தோழி.

**பறை**

மருதநிலத்தில் நெல்லரி பறை, மணமுழவு போன்றவை அக்காலத்தில் பயன்பாட்டில் இருந்திருக்கிறது. பேரூர், மூதூர் போன்ற ஊர்களில் பறையடித்துதான் கூட்டம் நிகழ்த்தி அவ்வூருக்கு

தேவையான அனைத்தையும் செயல்படுத்தி இருக்கின்றனர். அப்பழக்கம் இன்றும் சில சிற்றூர்களில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் சங்க இலக்கியத்தில் ஓரம்போகியார் பாடல்களில் அந்த ஒலியானது நாரையின் குஞ்சுகளின் குதலுக்கு, உவமையாக கூறப்பட்டுள்ளது.

**மென்தலை குருகன் மென்பறை விளிக்குதல்**

**நீள்வயல் நண்ணி இமிழும் ஊர (ஐங்.186)**

மென்பறை என்ற சொல்லில் ‘பறை’ என்ற பொருள் குறிப்பிடப்பட்டுள்ளது.

**யாழ்**

தொன்மைக்குடியில் வாழ்ந்த தமிழன் ஒவ்வொரு நிலத்துக்கும், ஒவ்வொரு யாழினைப் பெயரிட்டு அழைத்து வந்தான். அந்த வகையில் மருதநிலத்தின் கருப்பொருளாக ‘மருதயாழ்’ கூறப்பட்டுள்ளது. மருதநிலத்து பாடல் ஒன்று இதனை விளக்குகிறது. அது தோழி தலைவி நாட்டின் பெருமையைக் கூறி அவளுடைய சொற்கள் யாழிசை நரம்பை விட இனிமையானவை என்று எடுத்துரைக்கிறாள். வயல்வெளிகளில் வாழ்ந்துதிரிந்த மனிதர்களுக்கும் செல்வச் செழிப்பான வாழ்வு இருந்திருக்றிது என்பதனை இப்பாடல் நமக்கு வெளிக்காட்டுகிறது.

**பண்**

மருதநிலமக்களால் பாடப்படும் ஒரு வகையான இரண்டாம் தரமான பண் ‘காமரம்’ என்ற செய்தி சிறுபாணாற்றுப்படையில் உள்ளது.

**காமரு தும்பி காமரஞ் செப்பும்**

**தண்பணை தழீஇய தளரா விருக்கை (சிறுபா.77-78)**

என்பதில் ‘காமரம் செய்யும்’ என கூறப்பட்டுள்ளதை நச்சினார்க்கினியர் கோமரம் என்னம் பண்ணைப்பாடுகிற தும்பி என விளக்குகிறார்.

**தொழில்**

உழவுத் தொழில் செய்தவர்களைத் தனி இனமாக உழவன் என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கின்றன. உழவன் என்ற மருத நிலத்தின், வயல்சார்ந்த சூழலில் வளமான விளைச்சலை விளைவித்துக் கொண்டு வாழ்ந்து வந்தனர். மருதநிலத்து மக்களை மள்ளர் என்றும், இன்னும் பிற பெயராலும் அழைத்தனர். மருத நிலத்தில் வாழ்ந்த மக்களாக உழவர், களமர், தொழுவர், மள்ளர், கம்பளர் போன்றோர் உழவு, களம், அறுவடை, களைப்பறிதல் போன்ற தொழிலை முதன்மைத் தொழிலாகவும், கடைநர், கிளைஞர், மகிழ்நர் போன்றோர் மருதநிலத்தில் உள்ள உயர் பண்ணையோர்களிடம் பணி மேற்கொண்டவர்களாக இருக்கக்கூடுமென எண்ணத் தோன்றுகிறது.

**நிறைவுரை**

சங்கப் பாடல்கள் அனப்னி ஐந்திணையின் முதல், கரு, உரி என்ற முப்பகுப்போடு இயல்புச் செறிந்த வாழ்வியலை அக்காலத் தமிழர்கள் வாழ்ந்தனர் என்பதை நமக்கு அறிவுறுத்துகிறது. இக்கருப்பொருட்களின் பகுப்பு முறையில் இயல்போடு, இயற்கையோடும் தனிமனிதனின் அல்லது கூட்டத்தின் காதல், வீரம், கொடை, அன்பு, வளம், திறமை ஆகியவற்றை உவமையாகக் கொண்டும், எடுத்துக்காட்டியும் பரிந்துணர்ந்த நெறி என்று சால சிறந்த ஒன்றாகும். முப்பொருளில் முதலும், உரியும் காலத்தையும், இடத்தையும் குறிப்பிட கருப்பொருள் மட்டும் அந்நில மக்களின் வாழ்வியல் சிந்தனைகளையும் இயற்கையையும் படம் பிடித்துக் காட்டுகிறது. ஐவகை நிலத்திற்கும் சிறப்பனதொரு நிலமாக மருதநிலம் அமைகிறது. ஏனென்றால் அடிப்படைத் தேவைகளில் ஒன்றான ‘உணவு’ என்பதை

மலர் - 1, சிறப்பிதழ் 1, தை 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

உருவாக்கக்கூடிய தொழிலை தலையான தொழிலாகக் கொண்டவன் மருதநிலத்தில் வாழக்கூடியது ‘உழவன்’. உழவுத் தொழில் என்பதே இயற்கையானது அதிலும் அதனை இயற்கையோடு இயைந்துக் கொண்டு வாழ்ந்து வந்தவர்கள் மருதநில மக்கள் என்பது புலப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1] குருநாதன், இராம., *குறிஞ்சிக்காட்டும் சமுதாயம்*, தமிழ்ச்சாலை, சென்னை, 2007.
[2] சங்கர், இரா., *திணைநில வாழ்வியலில் மருதநிலத்து மக்கள்*, சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், 2020.
[3] சுப்பிரமணியன், ச.வே., *சங்க இலக்கியம்* (எட்டுத்தொகை, தொகுதி-1), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.
[4] சுப்பிரமணியன், ச.வே., *சங்க இலக்கியம்* (எட்டுத்தொகை, தொகுதி-2), மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2010.
[5] மாணிக்கம், வ.சு.ப., *தமிழ்க் காதல்*, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2007.
[6] வரதராசன், மு., *பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை*, பாரி நிலையம், சென்னை, 2011.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.